ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 26 ]
Total No. of Questions : 26 ]

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 7
[ Total No. of Printed Pages : 7

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 252-T (NS)**

**Code No. : 252-T (NS)**

# ಕಲಿಕೆಯನು–ಅನುಕೂಲಿಸುವುದು (ಹಿ.ಪ್ರಾ.ಶಾ.)
# ಪ್ರಥಮ ಭಾಷೆ – ತಮಿಳು
# FACILITATING LEARNING ( HPS )
# FIRST LANGUAGE — TAMIL

**(ಹೊಸ ಪಠ್ಯವಸ್ತು)**

**( New Syllabus )**

ದಿನಾಂಕ : 30. 06. 2015 ]
Date : 30. 06. 2015 ]

ಸಮಯ : ಮಧ್ಯಾಹ–2.00 ರಿಂದ 5.00 ರವರೆಗೆ ]
Time : 2.00 P.M. to 5.00 P.M. ]

[ ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 60
[ Max. Marks : 60

*ಅಭ್ಯರ್ಥಿಯ ನೋಂದಣಿ ಸಂಖ್ಯೆ*
*Register Number of the Candidate*

***குறிப்பு :***

i) இது 60 மதிப்பெண்களின் வினாத்தாள்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் சிந்தித்து பதிலளிக்க வேண்டும். இதற்காக 3 மணி நேரங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையளிக்கவும்.

## PART – I

I. இப்பகுதியில் மொத்தம் 10 வினாக்கள் இருக்கின்றன. **எல்லா** வினாக்களுக்கும் பதிலளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அதில் ஏதாவது ஒரு விடை சரியானதாக இருக்கும். அதைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

$10 \times 1 = 10$

1. குழந்தைகளுக்கு கேட்டல் எங்கு கிடைக்கும் ?

(A) வகுப்பறையில்

(B) பொது வாழ்வில்

(C) பிரார்த்தனை மண்டபத்தில்

(D) பொதுக்கூட்டங்களில்.

2. கதை சொல்லும்போது குழந்தைகள் புரிந்து கொண்டுள்ளார்களா - என்பதைத் தெரிந்து கொள்ள .................................... .

(I) கதையை மீண்டும் கூறும்போது

(II) வினாக்கள் கேட்பது

(III) கேட்டவற்றை மாணவர்கள் சிந்திப்பது

(IV) கதையின் நீதிக்கருத்தைக் கேட்பது.

(A) I மற்றும் II சரி (B) II மற்றும் III சரி

(C) II மற்றும் IV சரி (D) I மற்றும் IV சரி.

3. குழந்தைகள் வீட்டில் பேசப்படும் மொழியை தனது மொழி என்று சொல்வதற்கு

(A) விளையாட்டு

(B) அழுகையின் மூலம் மற்றவர்களுக்கு உணர்த்துவது

(C) வீட்டில் உள்ளவர்களின் உதவி

(D) பொங்கி எழும் பேச்சு.

4. மொழி பயில்வது என்றால் ................................... .

(A) மொழியின் இலக்கணங்களை தெரிந்து கொள்வது

(B) மொழியின் நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்வது

(C) மொழியிலுள்ள இலக்கியங்களைப் படிப்பது

(D) மற்றவர்கள் குறுக்கீடு இல்லாமல் இருப்பது.

5. வகுப்பறையில் மாணவர்கள் தன் அனுபவங்கள் மற்றும் விபரங்களை பகிர்ந்து கொள்வதற்கு வகுப்பறை சூழ்நிலைகள் எவ்வாறு அமைய வேண்டும் ?

(A) முழு உரிமையுடன் இருக்க வேண்டும்

(B) தவறு செய்யாமல் - எதை வேண்டுமானாலும் செய்யலாம்

(C) தன்னுடைய விருப்பங்களை பயமின்றி ஆசிரியருக்கு தெரிவிக்கலாம்

(D) மற்றவர்களின் குறுக்கீடு இல்லை.

6. மற்ற மொழிகளைப் பேசிவரும் குழந்தைகளிடம் ஆசிரியர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் ?

(A) எல்லாக் குழந்தைகளும் அவர்களது மொழியில் பயில உதவி செய்தல்

(B) ஆசிரியர் குழந்தைகளின் மொழியைத் தெரிந்து கொள்ளுதல்

(C) அவற்றிற்குரிய புத்தகங்களை வாங்குவது

(D) மற்ற மொழிக்கும் இடமுண்டு என உணர்வது.

7. குழந்தைகள் பள்ளியில் கற்றுக் கொள்வது .......................... .

(A) ஆடுவது

(B) தூங்குவது

(C) சாப்பிடுவது

(D) எழுதுதல் மற்றும் படித்தல்.

8. இலக்கிய இரசனையை அனுபவிக்க வேண்டியது

(A) கவிதைகளை இராகத்துடன் படிப்பது

(B) ஆடுதல் மற்றும் பாடுதல்

(C) நன்னடத்தை

(D) விளையாட்டின் மூலம்.

9. வகுப்பறையில் குழந்தைகள் எவ்வாறு அறிவு வளர்ச்சி அடைந்துள்ளனர் என்பதை அறிய தேர்வு முக்கிய காரணம். ஏனெனில் .......................... .

(A) வகுப்பறையில் நூதன கல்வி முறையைத் தெரிந்து கொள்வது

(B) எல்லா குழந்தைகளும் கற்க வேண்டும் என்னும் குறிக்கோள்

(C) தேர்வு முறையில் ரூப்ரிக்ஸ் முறை அவசியம்

(D) ஒவ்வொரு குழந்தைகளும் வகுப்பறையில் வெவ்வேறு விதமான செயல்களைத் தெரிந்திருப்பது.

10. தமிழ்நாட்டின் ஆட்சி மொழியாக தமிழ் இருக்கக் காரணம் .................................. .

(A) மக்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

(B) மொழிகளில் சிறப்புடையது

(C) இலக்கிய ரசனை உடையது

(D) எளிதில் புரியக்கூடியது.

## PART – II

II. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக : 5 × 2 = 10

11. படிப்பில் கவனம் செலுத்துபவர்கள் யார் ?

12. படிப்பை அனுசரிக்கக் கூடிய திறன்கள் யாவை ?

13. வகுப்பறையில் நூலகம் அமைப்பது ஏன் ?

14. எழுதுவதைப் பற்றி என்.சி.டி.இ-யின் நம்பிக்கை என்ன ?

15. குறிப்பு எழுதுவதின் உபயோகம் என்ன ?

16. குழுக்கள் விவாதங்கள் எவ்விதம் நடைபெற வேண்டும் ?

17. மாணவர்களின் திறமையைப் புரிந்து கொள்வது எவ்வாறு ?

18. கேட்ட ன் முறையில் மாணவர்களிடம் இருக்க வேண்டியது என்ன ?

## PART – III

III. எவையேனும் **எட்டு** வினாக்களுக்கு மட்டும் இரண்டு பக்க அளவில் விடை தருக.

$8 \times 5 = 40$

19. அ) கேட்டல் திறனை வளர்ப்பதற்கு முன் ஆசிரியர் தன்னை எவ்வாறு தயார் செய்து கொள்ள வேண்டும் ?

*அல்லது*

ஆ) கேட்டல் திறனில் குழந்தைகளை எவ்வாறு மதிப்பீடு செய்ய வேண்டும் ?

20. அ) மொழி பயிற்றுவிப்பதின் நோக்கம் என்ன ?

*அல்லது*

ஆ) மொழியை குழந்தைகள் எவ்வாறு வளர்த்துக் கொள்கிறார்கள் ?

21. அ) வகுப்பறையில் மொழியை எவ்வாறு வளர்ப்பீர் ?

*அல்லது*

ஆ) இலக்கியத்தின் தன்மையை மாணவர்களுக்கு எவ்வாறு உணர்த்துவீர் ?

22. அ) தமிழ் இலக்கியத்தை எத்தனை வகையாகப் பிரித்திருக்கிறார்கள் ?

*அல்லது*

ஆ) தமிழ் பேசப்படும் விதம் இடத்திற்கு தகுந்தாற்போல் எவ்வாறு மாறுபடுகிறது ?

23. அ) மொழி பயிற்றும் முறையில் உள்ள விதிமுறைகள் யாவை ?

*அல்லது*

ஆ) பலதரப்பட்ட மொழிகளைப் பேசி வரும் குழந்தைகளிடம் பயிற்று மொழியைக் கற்பிக்க எவ்விதத்தை மேற்கொள்வீர் ?

24. அ) படிப்பு என்றால் என்ன ? விளக்குக.

*அல்லது*

ஆ) கற்றுக் கொள்பவர்களை மேலும் உயர்வடையச் செய்ய எம்முறைகளை நினைவில் வைத்துக் கொள்வீர் ?

25. அ) படித்தல் திறன்களை வளர்ப்பதற்கு நவீன முறையை எவ்வாறு கையாள்வீர் ?

*அல்லது*

ஆ) சொற்கள் விளையாட்டு என்றால் என்ன ? விளக்குக.

26. அ) படிப்பதற்கு ஆர்வம் எழும் சூழ்நிலையை எவ்வாறு உருவாக்குவீர் ?

*அல்லது*

ஆ) கீழ்க்கண்ட கதையை குழந்தைகளிடம் படிப்பதற்குக் கொடுத்து அவர்கள் அதை புரிந்து கொண்டுள்ளார்களா ? என்பதை அறிய பத்து வினாக்களைக் கேட்கவும்.

ஒரு காட்டில் ஒரு கொக்கு மற்றும் நரி வாழ்ந்து வந்தது. ஒருநாள் நரி கொக்குவின் வீட்டிற்குச் சென்று விருந்திற்கு அழைத்தது. கொக்கும் மறுபேச்சின்றி விருந்திற்குச் சென்றது. நரி கொக்கிற்குப் பிடித்தமான மீன் மற்றும் நண்டு வகைகளை ஓர் அகலமான பாத்திரத்தில் வைத்திருந்தது. கொக்கினால் அதை எடுத்து சாப்பிட முடியவில்லை. அதேபோல் கொக்கும் நரியை விருந்திற்கு அழைத்து ஒரு பெரிய ஜாடியில் தின்பண்டங்களை வைத்திருந்தது. ஆனால் நரியால் தின்பதற்கு முடியவில்லை. ஏமாற்றம் அடைந்து சென்றது. இதிலுள்ள நீதிக் கருத்தைக் கூறுங்கள்.